தமிழர்களின் இதயத் துடிப்பு

# குமுதம்

ம்பர் 1 தமிழ் வார இதழ்

₹ 25 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹ 30 (மற்ற மாநிலங்களில்)

30.11.2022



## கலகத் தலைவன் ரேட்டிங் என்ன?

## தேங்க்ஸ் சிவகார்த்திகேயன்! நெகிழும் யோகிபாபு

# எனக்கு க்ரஷ் விஜய்சேதுபதி மேலதான்!

## மகிமா நம்பியார்

# சம்பாதிக்கத் தெரியுது...

# சேமிக்கத் தெரியல!





இளையரவி

# மாடர்ன் யூத் டோட்டல் வேஸ்ட்டா?

**லேட் நைன்டீஸ், 2 கே கிட்ஸ்... இவங்களை புரிஞ்சிக்கவே முடியலை... காதலா, மூணு மாசம்... வேலையா, ஆறு மாசம்... உப்புசப்பில்லாத காரணத்துக்கு லட்சம் ரூவா வேலையை ஜஸ்ட் லைக் தட் விட்ருவாங்க, காரணமே இல்லாம பிரேக்கப் பண்ணிக்குவாங்க. அடுத்த வேலைக்கும், அடுத்த காதலுக்கும் கிடைக்கிற கேப்புல கோவாவுக்கு ஒரு ட்ரிப், குலுமணாலிக்கு ஒரு டூர். அதிசயமா ஆன்மிக சுற்றுலாகூட நடக்கும்.**

கூகுள் பேயால சுரண்டி சுரண்டி அக்கவுன்ட்ல அடி பிடிச்சதும் மினி ஸ்டேட்மென்ட் எடுக்கும்போது உண்டியல் காலின்னு தெரியும். அதுக்குள்ள பெட்ரோலும் ரிசர்வ்க்கு வர, அவசர அவசரமா அடுத்த வேலைய தேடறது... வேலை கிடைச்சதும் காத்துவாக்குல அடுத்த காதல்... 2 கே கிட்ஸ்களோட மொத்த வாழ்க்கையும் செமஸ்டர் மாதிரிதான்... ஆறு மாசத்துக்கு மேல அவங்களுக்கு எல்லாமே அவுட் ஆஃப் ஃபோகஸ், சிலபஸ் தான். லவ் டுடே, லிவ் டுடே.... அவ்வளவுதான். இவங்கள்லாம் இப்படி இருக்கக் காரணம் யாரு?

“வேற யாரு, நாமதான். அதீத செல்லம். கேட்டவுடனேயே வாங்கித் தருவது, கேட்காமலேயே

வாங்கித் தருவது. எதையும் அவர்களுக்கு எளிதாக்குவது! பிரச்னையே அதான். அதுக்காக அவங்களை மொத்தமா குத்தம் சொல்ல முடியாது நல்லா படிக்கிறாங்க, நல்ல வேலைக்குப் போறாங்க, நல்லாவும் சம்பாதிக்கிறாங்க... இதுவரைக்கும் எல்லாம் நல்லாத்தான் போகுது. சம்பாதிக்கிற காசு எல்லாமே செலவு பண்ணதான் என்று நினைக்கிற மனநிலைதான் லைஃப்ல எதுலயும் ஒரு கமிட்மென்ட் இல்லாதவங்களா அவங்களை மாத்திடுது. அதுக்கு டிஜிட்டல் எக்கனாமியும் முக்கியக் காரணம். சேவிங்க்ஸ்னா அவங்களுக்கு செல்போன்ல டேட்டா மட்டும் தான். மாதாந்திர கமிட்மென்ட்னா பார்லர் பில் மட்டும்தான்.

கல்சர், மிக்சர்னுல்லாம் இவங்கள மோட்டிவேட் பண்ண முடியாது. பணத்த எப்படிச் சேமிக்கிறது, நேரத்த எப்படி இன்வெஸ்ட் பண்றதுன்னு அவங்களுக்கு உபதேசமா இல்லாமல், உபயோகமா சொன்னாலே கொஞ்சம் பொறுப்பு வரலாம்" என்கிறார் 25 வருடங்களுக்கும் மேலாக ஃபைனான்சியல் கன்சல்டன்ட்டா இருக்கும் எஸ். சுப்பிரமணி.

பணமே மருந்து... கேட்க நல்லாத்தான் இருக்கு. ரொம்ப காஸ்ட்லி மெடிசனாவும் இருக்கு. யூத்துகளோட யர்னிங் எப்படி இருக்கு? அவங்களோட சேவிங்ஸ் எப்படி இருக்கணும்? சுப்பிரமணி சொல்லும் ரூல்ஸ் இதுதான்...

"இந்தக்கால பசங்களுக்குப் பணத்தோட வேல்யூ தெரியும், அதோட குரோத் எப்படிங்கறதுதான் தெரியறதில்ல. அது தெரிஞ்சா சேமிக்க ஆரம்பிச்சிருவாங்க. அவங்க சேமிக்க ஆரம்பிச்ச உடனேயே ஒரு பொறுப்பு, தானா வந்துடும்.

> உங்ககிட்ட நேரம் அதிகமிருந்து பணம் கம்மியாக இருந்தால், நேரத்தை அதிகமாக முதலீடு செய்யுங்கள். பணம் அதிகமாக இருந்து நேரம் குறைவாக இருந்தால் பணத்தை அதிகமாக முதலீடு செய்யலாம்.

யங்ஸ்டர்ஸ், முதல்ல சேமிப்பை ரொம்ப சீரியஸா பாக்காதீங்க. வாயக்கட்டி, வயித்தக்கட்டிதான் சேமிக்க முடியுங்கிறதலாம் அந்தக் காலம். இப்ப இது ஒரு ஃபன், விளையாட்டு மாதிரி... ஆனா இந்த விளையாட்டுல இருக்கிற ரூல்ஸ ஸ்ட்ரிக்டா ஃபாலோ பண்ணினா அதானி, அம்பானி ஆகாவிட்டாலும், கூட்டமான பஸ்ல ஜன்னலோர சீட்ல உட்கார்ந்து போற மாதிரி லைஃப்ல

ஜாலியா டிராவல் பண்ணலாம்.

உங்களோட வருமானத்துல ஒரு 20 பர்சன்ட் சேமிச்சாலே போதும், உங்க ஃபியூச்சர் அவ்ளோ அழகா இருக்கும். அதை சேமிப்புன்னு சொல்றதவிட இன்வெஸ்ட்மென்ட்டுன்னு சொல்றதுதான் சரி. எதுல இன்வெஸ்ட் பண்ணலாம், எப்படிப் பண்ணலாம்? அதை தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி இந்த



விளையாட்டோட முக்கியமான ரூல்ஸை நீங்க நல்லா தெரிஞ்சுக்கணும்.

## ஃபர்ஸ்ட் ரூல்:

ரூல் ஆஃப் 72. அதாவது நாம் சேமிக்கிற பணம் எப்போ டபுள் ஆகும்னு கண்டுபிடிக்கிறது. உங்ககிட்ட ஒரு பத்து ரூபாய் இருக்கு. அதை வருஷத்துக்கு 6 பர்சன்ட் வட்டி கிடைக்கிற இடத்துல இன்வெஸ்ட் பண்றீங்கன்னு வெச்சுக்கோங்க, அது எப்போ டபுள் ஆகும்? சிம்பிள், 72ஐ 6 ஆல் வகுங்கள் 12 வரும். அதாவது 12 வருடத்தில் டபுளாகும். அதுவே 18 பர்சன்ட் என்றால், 72ஐ 18 ஆல் வகுக்க 4 வரும். நான்கே வருடத்தில் டபுளாகும்.

இங்க நீங்க புரிஞ்சுக்க வேண்டியது, இன்வெஸ்ட்மென்ட்னாலே பணம் மட்டுமல்ல, நேரமும் முதலீடுதான். உங்ககிட்ட நேரம் அதிகமிருந்து பணம் கம்மியாக இருந்தால், நேரத்தை அதிகமாக முதலீடு செய்யுங்கள். பணம் அதிகமாக இருந்து நேரம் குறைவாக இருந்தால் பணத்தை அதிகமாக முதலீடு செய்யலாம்.

எப்படி செஞ்சாலும் அதில் கவனிக்க வேண்டியது மூணு விஷயம்...

1. **யீல்டு,** அதாவது லாபம்.
2. **லிக்விடிட்டி,** அதாவது நினைச்ச நேரத்துல விக்க முடியுமா?
3. **ஸேஃப்டி,** பாதுகாப்பானதா, போட்ட காசு சேதாரமில்லாம வருமா?

இந்த மூணுல எது முக்கியம்னு நினைக்கிறீங்களோ அதற்கு தோதான இடத்தில் முதலீடு செய்யணும். இந்த மூணுமே வேணும்னு நினைச்சா அப்படி ஒரு முதலீடு இந்த உலகத்தில் இல்லை என்பதே உண்மை.

நம்ம நாட்டில் இப்போதைக்கு முதலீடு செய்வதற்கு நல்ல ஏரியான்னா ஒரு ஐந்து சொல்லலாம்...

**1. லைஃப் இன்ஷ்யூரன்ஸ்**

**2. ஷேர்ஸ்**

**3. தங்கம்**

**4. பேங்க் எஃப். டி.**

**5. ரியல் எஸ்டேட்**

இந்த ஐந்தில் எது யாருக்கு பொருந்தும்?

**21 வயது முதல் 31 வரை:** குடும்பத்தோட பாதுகாப்பு, குழந்தைகளோட எதிர்காலம், குறைந்த முதலீட்டில் அதிக பயன் எல்லாத்துக்கும் லைஃப் இன்ஷூரன்ஸ் நல்ல சாய்ஸ். வட்டிக்கு வட்டி, லாபத்துக்கு லாபம்னு ரிஸ்க் எடுத்து சம்பாதிக்க ஷேர்ஸ்.

**31 வயது முதல் 40 வரை:** தங்கம்தான் பெஸ்ட் சாய்ஸ்.



எஸ். சுப்பிரமணி

**40க்கு மேல் 50 வயது வரை:** பேங் எஃப்.டி நல்லது.

**50 முதல் 60 வரை:** இதுக்குமேல ரியல் எஸ்டேட்ல இன்வெஸ்ட் பண்றதுதான் புத்திசாலித்தனம்.

இதுல இந்த ஐந்தாவது விஷயம் மட்டும் யூத்துகளுக்கு செட்டாகாது. அடிக்கடி வேலைய மாத்துறது, இடத்த மாத்துறதுன்னு இருக்குறவங்களுக்கு ஹவுஸிங் லோன் இன்வெஸ்ட்மென்ட்டே இல்லை, அது லையபிளிட்டி, அதாவது சுமை. ஓடிக்கிட்டே இருக்கிற உங்களோட தோள்ல சுமை இல்லன்ன வேகமா ஓடலாம், சுலபமா ஓடலாம்.

90 பர்சன்ட் லோன், குறைஞ்ச மாதத் தவணைன்னு நம்பி ஏமாந்துறாதீங்க. அதுக்கான வட்டி, பணவீக்கம், வாடகை வருமானம், விற்கிற மதிப்புன்னு கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் பெரிய நஷ்டம்தான் வரும். உங்களோட 20

"இல்லாததையும், பொல்லாததையும் கேட்டாங்கன்னுதான் நடிகை நளினஸ்ரீயை அந்த டைரக்டர் கழட்டிவிட்டுட்டாராம்!"

"அப்படியென்ன கேட்டுட்டாங்களாம்?"

"படத்தோட கதை என்னன்னு கேட்டிருக்காங்க!"

– வி. ரேவதி, தஞ்சை.



வருட நஷ்டம் பில்டரோட ஒரே நாள் லாபம். உஷாரா இருந்துக்கோங்க.

ரூல்ஸ்லாம் ஓகே. விளையாடுறதுக்கு முன்னாடி மைதானம் கிளீயரா இருக்கணும். அதாங்க, உங்களோட ஃபைனான்ஷியல் டிஸிப்ளின்... இன்வெஸ்ட் பண்ணணும்னு ஆரம்பிச்சிட்டா உங்களுக்குக் கடன் இருக்கக் கூடாது. அப்படி கடன் இருந்துதுன்னா முதல்ல அதத்தான் அடைக்க முயற்சி பண்ணணும். அது ஒருபக்கம் இருக்கட்டும், இது ஒருபக்கம் நடக்கட்டும்னா பிம்பிளிக்கா பிளாக்கிதான்.

அடுத்தது விளையாடுறதுக்கான எனர்ஜி, உங்களோட எமெர்ஜன்ஸி ஃபண்ட்... அதாவது ஒரு ஆறு மாசத்துக்கு உங்களோட அடிப்படை தேவைகளுக்கான பணத்தைத் தனியா ஒரு ஓரமா எடுத்து வெச்சிரணும். அதுக்கப்புறம்தான் இந்த விளையாட்டுலயே இறங்கணும். அப்படி செய்தால் வெற்றியும் உறுதி. வீட்லயும் நம்பிக்கையோட இருப்பாங்க.

'இதுக்கெல்லாம் ரொம்ப நாளாகும்பா, என் தலைக்குமேல அவ்ளோ பிரச்னை இருக்கு'ன்னு ஃபீல் பண்றீங்களா, கவலைப்படாதீங்க... உங்களுக்காகவே ஒண்ணு இருக்கு... அதான் இன்வெஸ்ட் யுவர்செல்ஃப்.



உங்க மேலயே நீங்க முதலீடு செய்யலாம்...

நீங்க இன்னிக்கு என்ன வேலை செய்யறீங்களோ அது தொடர்பான அறிவு, திறமையை தினமும் வளர்த்துக் கொள்வதற்காக நேரத்தையும், முடிஞ்ச அளவு பணத்தையும் செலவு பண்றது. அது செலவு இல்ல அதுவும் இன்வெஸ்ட்மென்ட்தான். போட்டதுக்கு மேல பல மடங்கு லாபம் கண்டிப்பா வரும். இதை யார் வேணும்னாலும் செய்யலாம்.

வேலை போரடிக்குது, லவ் பிரேக்கப், ரொம்ப ஃபீல் ஆயிட்டேன்னு ரிஸைன் பண்ணிட்டு கையில காசு இருக்கிறவரைக்கும் சும்மா ஊர் சுத்தாமல் மேல படியுங்க, ட்ரெயினிங் போங்க, செமினார் அட்டென்ட் பண்ணுங்க. அப்புறம் திரும்பிவாங்க, ச்சும்மா அதிருமில்ல... நம்பிக்கை தருகிறார் எஸ். சுப்பிரமணி!"

ஆல் தி பெஸ்ட்!